பாதை தெரியுது பார்

# கதைச் சுருக்கம்

நோபுள் கார்ப்பரேசன் கம்பெனியில் அக்கவுண்டன் வேலை பார்ப்பவர் சுந்தரம்பிள்ளை. அவரது ஆபீசில் சீனியர் கி காக வேலைசெய்யும் ராமையர், சுந்தரம் பிள்ளையின் அ நண்பர். தனது ஆபீசில் வேலைபார்க்கும் சிப்பந்திகளிடம் மிக டிப்பான போக்கை அனுஷ்டிப்பவர் சுந்தரம் பிள்ளை.

அதே சுந்தரம் பிள்ளை, வீட்டில், சங்கரனுக்கும், மீனுவுக்கும் மிக வாஞ்சையுள்ள தந்தை. அவர் மனைவி சிவகாமியும், அவரும் த கள் குழந்தைகளுக்கு நல்லதொரு எதிர்காலத்தை சிருஷ்டிக்க சதா திட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

சுந்தரம் பிள்ளையின் நெருங்கிய நண்பர் வேலுசாமித் தேவர் இறந்ததற்குப்பின்னால் அவரது ஒரே மகன் முருகேசனை வளர்த்ததே சுந்தரம் பிள்ளை தான். முருகேசனும் மீனுவும் ஒருவரை ஒருவர் காதலித்தனர். ஆனால் அந்தக் காதல் விவகாரம் வீட்டிலுள்ள பெரியவர்களுக்குத் தெரியாது. ஓரளவு படித்த முருகேசன், தொடர்ந்து பிள்ளையின் குடும்பத்திற்குபாரமாக இருக்க வேண்டாமென்று கருதி அவ்வூரிலுள்ள பஞ்சாலையில் ஒரு தொழிலாளியாகச்சேர்ந்தான். அவனே தான் அங்குள்ள பஞ்சாலைத் தொழிற் சங்கத்தின் செயலாளன்.

பஞ்சாலை நிர்வாகி மாணிக்கவாசகம் பிள்ளையும் சுந்தரம்பிள்ளையும் நன்கு அறிமுகமானவர்கள். மாணிக்க வாசகம் பிள்ளையைப் போன்ற பெரிய மனிதர்களின் கசப்பிற்கெல்லாம் ஆளாகிறானென்று பன்முறை முருகேசனை சுந்தரம்பிள்ளை கண்டித்ததுண்டு.

பங்கு மார்க்கெட்டிலெல்லாம பணம் போட்டார் சுந்தரம் பிள்ளை. ஆரம்பத்தில் கிடைத்த வெற்றிகள் அவருக்கு போதை தரவே, அவர் பெருந் தொகையாக ஈடு வைக்கலானார். ஆனால், ஐயகோ! அவர் ஈடுகட்ட முடியாத நஷ்டத்திற்கு ஆளானார்.

முருகேசன் தலைமையில் ஆலைத் தொழிலாளர்கள் நியாயவிலையில் அரிசி கிடைக்க ஒரு கூட்டுறவுப் பண்டகசாலையை போராடிப் பெற்றார்கள். ஆலை நிர்வாகியான மாணிக்கவாசகம்பிள்ளை ஆரம்பத்தில் இதை எதிர்த்தாராயினும் கூட்டுறவு இயக்கத்தை சர்க்காரே ஆதரிப்பதின் விளைவாக இதற்குப் பணியவேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனாலும் பெரும் மண்டி வியாபாரியான சண்முகம் பிள்ளையுடன் சேர்ந்து அதைத் தோல்வியுறச் செய்ய ரகசிய திட்டங்களை தீட்டினார் மாணிக்க வாசகம் பிள்ளை.

குடும்பத்தின் அவல நிலை குழந்தைகளுக்குத் தெரியவே சங்கரன் 'மெக்கானிக்'காகப் போய்ச் சேர்ந்தான். மீனு உபாத்தியாயினி வேலைக்கு மனு போட்டாள்.

லண்டனிலே படித்துக்கொண்டிருக்கும் சண்முகம் பிள்ளையின்
மகனுக்கு மீனாவைப் பெண்கேட்க வந்தார் மாணிக்கவாசகம்பிள்ளை.
இதைத்தொடர்ந்து வீட்டில் ஒரேபுயலும் பூகம்பமும் ஏற்பட்டன...
தொழிலாளர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட கூட்டுறவு பண்டக
சாலையில் அவர்களுக்கு அரிசி சரிவர கிடைப்பதில்லை. மாயமாக
மறையும் அரிசி விவகாரத்தை எப்படியாவது கண்டுபிடித்துவிட
வேண்டுமென்று தொழிலாளர்கள் கச்சைகட்டிக்கொண்டு நின்றனர்.
நீண்ட நாட்களுக்குப் பிறகு சுந்தரம் பிள்ளை நோபுள் கார்ப்ப
ரேஷன் மானேஜரானார். புதிதாக ஏற்படப்போகும் 'சம்மந்தி'யின்
புண்ணியத்தினால்தான் இப்பதவி கிடைத்தது என்று பூரிக்கலானார்
சுந்தரம் பிள்ளை.

ஆனால் பதவி கிடைத்த மறுநாளே தனது மதிப்பிற்குரிய நண்
[illegible]மையர் உள்பட சிலரை வேலை நீக்கம் செய்யவேண்டிய உத்
திரவும் மேலிருந்து வந்து சேர்ந்தது.

சுந்தரம் பிள்ளை இந்த உத்திரவை அமுல் நடத்தினாரா?
கூட்டுறவு பண்டகசாலையில் ஏற்பட்ட குள்ள நரிச் செயல்
வெளிப்பட்டதா?

மீனா முருகேசன் காதல் என்னவாயிற்று?
இதற்குமேலும் நாங்கள் கதை சொல்லலாமா?

---

# அமரகவி பாரதியார் நூல்கள்

| | ரூ. | காசு. |
|---|---|---|
| கவிதைகள் [கலிகோ பைண்ட்] | 5 | 00 |
| கட்டுரைகள் [கலிகோ பைண்ட்] | 5 | 00 |
| தேசிய கீதங்கள் | 1 | 00 |
| கீதை உரை | 1 | 50 |
| கதைக் கொத்து | 1 | 00 |
| நவதந்திரக் கதைகள் | 1 | 00 |
| சந்திரிகையின் கதை | 1 | 25 |
| தராசு | 0 | 75 |
| ஞானரதம் | 1 | 00 |
| மாதர் | 1 | 00 |
| கலைகள் | 1 | 00 |
| தத்துவம் | 1 | 25 |
| சமூகம் | 1 | 50 |
| மகாகவி பாரதியார் [தொகுப்பு] | 0 | 50 |

# பாதை தெரியுது பார் பாடல்கள்

## பாட்டு 1

இயற்: கே. சி. எஸ். அருணாசலம் பாடி: ஏ. எல். ராகவன்-குழு

ராசா மக போலிருந்தே
நாலு பேரு பாத்து உன்னை
லேசா யெண்ணிப் பேசலாச்சே பெண்மணி—உன்
நெஞ்சுங் கல்லாய் மாறிப் போச்சே கண்மணி
வட்ட லெனும் குளந்தனிலே
வாத்துக் கோழி போல் மிதந்தே
இட்டிலியே ஏனிளைத்துப் போனாய்?—நீயும்
எந்தப் பயல் மீது காதலானாய்?
அட டட டடா...ச்ச்...ச்ச்ச் (இட்)
அள்ளி விழுங் தும்படி
ஆசை கொள்ளும் உன்னழகைக்
கொள்ளை கொண்டுபோன கள்ளன் யாரடி—நீயும்
கொஞ்சஞ் சொஞ்சமாயுளைப்பதேனடி
அட......... (இட்லி)
மொளகாப் பொடி பூசி
எண்ணெயிலே தலை முழுகி
அழகா அதிகாரம் பண்ணினே—காலம்
அப்படியே இருக்குமுன்னு எண்ணினே
அட......... (இட்)

## பாட்டு 2

இயற்: ஜெயகாந்தன் பாடி: பி. பி. சீனிவாஸ்-ஜானகி

தென்னங்கீத்து ஊஞ்சலிலே
தென்றலில் நீந்திடும் ஓலையிலே
சிட்டுக் குருவி ஆடுது—தன்
பெட்டைத் துணையைத் தேடுது
நீலமேகம் ஏழு வண்ண
ஆடையோடு லாவுது
வானை பூமி அழைக்குது—தொடு
வானில் இரண்டும் கலக்குது! (தென்)
நீலக் கடல் ஓலமிட்டு
எங்கிருந்தோ கூவுது
அருவி பாடி நடக்குது—கடல்
அலையில் கலக்கத் துடிக்குது ( தென்

பாட்டு 3

தேவாரம் எஸ். ஜானகி, ஏ. எஸ். மகாதேவன்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே (மாசில்)
நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே... (மாசில்)
விறகில் தீயினன் பாலிற் படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான
உறவுகோல் நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே... (மாசில்)

பாட்டு 4

இயற்: சே. சி. எஸ். அருணாசலம் பாடி: டி. எம். சௌந்தரராஜன்

சின்னச் சின்ன மூக்குத்தியாம்
செகப்புக் கல்லு மூக்குத்தியாம்
கன்னிப் பொண்ணே உன் ஒய்யாரம் கண்டு
கண்ணைச் சிமிட்டுற மூக்குத்தியாம் (சின்ன)
வெத்தலை போட்டா உன் வாய் செவக்கும்—கன்னம்
வெக்கத்தினாலே செவந்திருக்கும்
முத்துன் சிரிப்பில் மறைஞ்சிருக்கு—உன்
முகத்தில் தாமரை பூத்திருக்கும் (சின்ன)
அள்ளிச் சொருகிய கொண்டையிலே...எந்தன
ஆவி சிறையுண் டிருக்குதடி
துள்ளித் திரியுற ரெண்டு கண்ணு—அதைச்
சொல்லிச் சிரிக்குது ஒண்ணுக்கொண்ணு (சின்ன)
நெத்தியில் பொட்டு பளபளக்கும்—கண்ணு
நெஞ்சை யிழுத்து எனை மயக்கும்
பித்துப் பிடிச்சவனென்னு சொல்லி—எனைப்
பேசிப் பேசி யிந்த ஊர் சிரிக்கும் (சின்ன)

## பாட்டு 5

இயற்: ஜெயகாந்தன் பாடி: பி. சுசிலா

அழுத கண்ணீரும் பாலாகுமா?
அதனால் உனது பசி தீருமா?
இன்பச் சுமையாய் இருந்தவனே
துன்பச் சுமையாய் பிறந்தவனே (அழுத)
தாயொரு ஏழை அறியாமல்—துயர்
தந்திட வந்தாய் என் மகனே
நீயொரு செல்வம் என்றிடுவார்—என்
நெஞ்சக் குமுறலைச் சொல்லிடுவாய் (அழுத)
சின்னஞ்சிறிய குடிசையிலே—ஒளி
சிந்திடவந்த திரு விளக்கே
எண்ணெயில்லாமல் பொன் விளக்கின்—சுடர்
ஆடித் துடிக்குது ஆண்டவனே (அழுத)
கட்ட நடுத்தெரு ஓரத்திலே—பனி
கொட்டிடும் குளிரில் நடுங்குகிறாய்
ஒட்டிய மார்பினில் முகம் புதைத்தே—நீ
உறங்கிட்டா என் கண்மணியே (அழுத)

## பாட்டு 6

இயற்: (லேட்) கல்யாணசுந்தரம் பாடி: லோகநாதன்-குழு

உண்மை ஒரு நாள் வெளியாகும்—அதில்
உள்ளங்களெல்லாம் தெளிவாகும்
பொறுமை ஒரு நாள் புலியாகும்-அதற்கு
பொய்யும் புரட்டும் பலியாகும் (உண்)
தாழம் பூவை தாலயில் மறைத்தாலும்
வாசம் மறைவது கிடையாது
சத்தியத்தையும் உலகில் எவனும்
சதியால் மறைக்க முடியாது (உண்)
அன்பு நெஞ்சிலே ஆத்திரம் வந்தால்
ஆண்டவன்கூட அஞ்சிடுவான்
அறிவுக் கதவை சரியாய் திறந்தால்
பிறவிக் குருடனும் கண்பெறுவான் (உண்)

வணக்கம்.

# நடிகர்கள்

புதுமுகம் விஜயன்

| | | |
|---|---|---|
| எஸ். வி. சகஸ்ரநாமம் | ... | எஸ். வி. சுப்பையா |
| டி. எஸ். முத்தையா | ... | டி. கே. பாலசந்திரன் |
| வி. கோபாலகிருஷ்ணன் | ... | ஆர். முத்துராமன் |
| ஏ. வீரப்பன் | ... | என். பரந்தாமன் |
| எஸ். பிரபாகர் | ... | எஸ். குல்மகமது |
| டி. வி. ராமசாமி | ... | ராஜவேலன் |
| தனபால் | ... | சேஷு |

நடிகைகள்:

எல். விஜயலட்சுமி

| | | |
|---|---|---|
| சுந்தரிபாய் | ... | எஸ். ஆர். ஜானகி |
| சாந்தினி | ... | பேபி கல்பனா |

மற்றும் பலர்

கதை வசனம்: ஆர். கே. கண்ணன்

பாடல்கள்:
(லேட்) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், ஜெயகாந்தன்,
பொள்ளாச்சி கே. சி. எஸ். அருணாசலம்

இசையமைப்பு:

எம். பி. சீனிவாசன்

பின்னணிப் பாடியவர்கள்:

டி. எம். சௌந்தரராஜன், திருச்சி லோகநாதன், பி. பி. சீனிவாஸ்
ஏ. எல். ராகவன், பி. சுசீலா, எஸ். ஜானகி.

தயாரிப்பு:

குமரி பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட்

டைரக்ஷன்: நிமாய் கோஷ்

ஸ்டுடியோ: பரணி (ஏ. எல். எஸ்.)

கலைமகள் அச்சகம், மதுரை-1